CC No. 50/2021 தேதி : 18.03.2026

<u>அ.சா. 7 திரு. ராமதாஸ், த/பெ. ஆர். சுப்ரமணியன் நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

30.01.2022 ஆம் தேதி தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசர் ஒப்புதல் வாக்குமூலம் யாரால் தயார் செய்யப்பட்டது என்றால் என்னால் தயார் செய்யப்பட்டது. மேற்படி ஆவணங்கள் மடி கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. என்னுடன் அரசு 4 சக்கர வாகனத்தில் இருந்த பிரிண்டர் மூலமாக மேற்படி ஆவணங்கள் பிரண்ட் அவுட் எடுககப்பட்டது. கைப்பற்றுதல் மகசரில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். சாட்சிகள் யாரும் தேதியிட்டு கையொப்பம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மற்றும் ஒப்புதல் வாக்குமூலங்கள் பிரிண்ட் அவுட் எவ்வா்று பிரிண்ட் அவுட்ட எடுக்கப்பட்டது என்று குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதேபோல் மடி கணினியில் ஒப்புதல் வாக்குமூலம் மடி கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதாக சொல்லைவில்லை என்றால் சரிதான். 30.01.2021 அன்று கைப்பற்றப்பட்ட வழக்கின் தடயபொருள் 08.02.2021 அன்று ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் மேற்படி தடய பொருள் யாரிடம் இருந்தது என்று காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரம் இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் எதிரியிடமிருந்த எந்த தடயபொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவ இடம் செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர புலன் விசலரணை செய்யாமல் எதிரிள் மீது தவறான அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

இத்துடன் சாட்சி குறுக்கு விசாரணை நிறைவுற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம் – S.T. கனிமொழி.,<br>
நீதித்துறை நடுவர் எண்–I,<br>
தஞ்சாவூர்.